பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை 07.07.2024 கதிர் 242

# சம்பந்தனின் இறுதி யாத்திரை இன்று தலைவர்கள், மக்கள் அணி திரள்வர்

## தமிழ்நாட்டிலிருந்தும் தலைவர்கள் வருகை











இலங்கைத்தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதிய யாத்திரை இன்று இடம்பெறவுள்ளது. இறுதி அஞ்சலியின் பின்னர் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் நாட்களில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இருப்பது வழக்கமாக நடக்கும் நிகழ்வு. சபையில் உரையாற்றவேண்டிய தேவை இருந்தால் தவிர தனது அலுவலகத்திலே அமர்ந்திருந்து தொலைக்காட்சியில் அமர்வுகளைப் பார்வையிட்டபடிஇருப்பார்ஜனாதிபதி. அப்போதுஆளும்தரப்புநாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி எதிர்த் தரப்புநாடாளுமன்றஉறுப்பினர்களும் அவரைச்சந்தித்துப்பேசுவதுவழக்கம்.

எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுப்பதற்கு ஜனாதிபதி கடும் முயற்சிகளை எடுத்து வருகின்றார் என்பதால் எதிர்க் கட்சியினரும் இந்தச்சந்திப்புக்களை கண்கொத்திப் பாம்பாகத்தீவிரமாகக்கணிகாணித்து வருவார்கள். ஒரு கட்டத்தில் எதிர்க் கட்சியைச்சேர்ந்த யார் யாரெல்லாம் எவ்வளவு நேரம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார்கள் என்கிற பட்டியலைப் பெறுவதை ☞ 2

## மனைவி குத்திக் கொலை கணவன் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறைப் பகுதியில்பெண்ஒருவர்நேற்றுகத்தியால் குத்திப் படுகொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திவிகரன் நிஷானி என்ற (வயது 29) இரண்டு பிள்ளைகளின் தாயாரே கொலை செய்யப்பட்டுள்ளார். .

கொழும்புத்துறை ஏவீ வீதி மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீட்டில் வசித்து வந்த நிலையில் நிஷானி நேற்று கத்திக் குத்துக் காயத்துடன் இறந்து கிடந்தார். தகவல் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில்பெண்ணின்கணவரைக் கைது செய்தனர்.

### ஜனாதிபதித் தேர்தலின் மூலம்

## நாட்டின் தலைவிதியை இனி மக்களே தீர்மானிக்கட்டும்

### தனது கடமைகள் முடிந்தன என்கிறார் ஜனாதிபதி

நாட்டுக்கான தனது கடமைகளை முடித்துவிட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விரைவில் நடக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் தலைவிதியை மக்களே தீர்மானிக்கட்டும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டுஉரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மையின் பாதையில் ☞ 8

## வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களுக்கு அடுத்த ஆண்டு முதல் மீள அனுமதி

அடுத்த ஆண்டு வெளிநாட்டுஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கையின் துறைமுகங்களுக்கு பிரவேசிப்பதை தடை செய்யப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜப்பான்சென்றிருந்த அமைச்சர், அங்குள்ள ஊடக முகவர் நிறுவனமானஎன்.எச்.கே இற்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

ஆராய்ச்சிக் கப்பல்களை அனுமதிக்கின்ற விடயத்தில்எமதுஆளும் தரப்பு ஒவ்வொரு நாடுகளுக்கும் வெவ்வேறு விதிகளை வைத்திருக்க முடியாது. சீனாவை மட்டும் தடுக்க முடியாது. மற்ற வர்களுக்கு இடையே ஏற்படும் சர்ச்சையில் எமது நாடு சிக்கிக்கொள்ளாது.

அதே நேரம் சோனார்பொருத்தப்பட்ட கப்பலை வழங்கும் ஜப்பானின் திட்டத்திற்கு நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அந்தக் கப்பல் ஊடாக இலங்கைதனது சொந்த தரவுகளை சேகரிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றது.

இலங்கையில்பயன்படுத்தப்படாத கடல் வளங்கள் இருக்கின்றன.

ஆகவே அதற்கான ஆராய்ச்சி மிகவும் அவசியமானது. ஆனால் அது வெளிப்படையான முறையில் செய்யப்பட வேண்டும். அதற்குநாம் எமது அர்ப்பணிப்பினை வழங்குவதற்கு தயராகவே உள்ளோம் என்றார்

## சாகலவின் வாகன தொடரணியை படம் பிடித்த இளைஞர் உடன் கைது

ஜானாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னாயக்க பயணித்தவாகனதொடரணியைகையடக்கதொலைபேசியில் காணொளி எடுத்த குற்றச்சாட்டின் கீழ் 21வயது இளைஞர் ஒருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் பொத்துவில் பகுதியைச் சேர்ந்தவர். இத்தகைய வாகனப் பேரணியைத் தான் இதற்கு முன்னர் கண்டதில்லை என்பதால் அதனைக் காணொலியாகப் பதிவு செய்தார் என்று பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அவரது அலைபேசியையும் பொலிஸாரால் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்,44வயதுடைய நபர்ரொருவருடன் துபாய் தூதரகத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போதே சாகலவின் வாகனத் தொடரணியை அவர் காணொலிப் பதிவு செய்துள்ளார்.

## மூன்று ஆண்டுகளில் 10 ஆயிரம் பாடசாலைகள் டிஜிட்டல் மயம்

### ஆளும் தரப்புத் திட்டம் என்கிறார் கல்வி அமைச்சர்

அடுத்த மூன்று ஆண் டுகளில் 10,026 பாடசாலைகளைடிஜிட்டல் மயமாக்கப்படும் என்று கல்விஅமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்

காலி - ஹால் டி கோல் ஹோட்டலில் நேற்றுநடைபெற்றகல்வி நவீனமயமாக்கலின் புதிய அத்தியாயமாக தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கும் நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலவசக் கல்விச் சட்டம் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்படி, 46% ஆக இருந்த ☞ 2

## மத்திய கல்லூரிகள், தேசிய பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டுத் திட்டம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவுப் பாடசாலைகளாக மேம்படுத்தப் படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

காலி - ஹால் டி கோல் ஹோட்டலில் நேற்றுநடைபெற்றகல்வி நவீனமயமாக்கலின் புதிய அத்தியாயமாக தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு 2,000 நவீன வகுப்பறைகள் மற்றும் 2,000 'டெப்' கணினிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் ☞ 2

## ஜெனிவாவில் இலங்கைக்கு மேலும் ஒரு வருட அவகாசம்

### கிட்டும் சாத்தியங்களே அதிகம்

ஐக்கியநாடுகள்மனித உரிமைகள்பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 40/1 தீர்மானம் இந்த ஆண்டு செப்டெம்பரில் முடிவுக்கு வரும் நிலை யில், அதனை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கான முன்நகர்வுகள் எடுக்கப்பட்டுள்ளனஎன்று கூறப்படுகின்றது. ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சஜித் பிரேமதாஸ வழக்கமாகக் கொண்டிருந்தார். இதன் --மூலம் அடிக்கடி யார் ஜனாதிபதியைச் சந்திக்கிறார்கள் என்பதை கண்காணித்து அவரின் அரசியல் நகர்வுகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டன.

இந்த வகையில் மிக அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தின் போது, சஜித்துடன் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஜனாதிபதியிடமிருந்துவிசேடசெய்தி ஒன்று கிடைத்தது. நாடாளுமன்ற அறைக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு அந்த அழைப்பில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இச்செய்தியைப்பெற்றுக்கொண்ட ஹக்கீம், சஜித்துக்கு இதனைத் தெரிவித்தார். எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஜனாதிபதியை சந்திக்குமாறு ஹக்கீமுக்கு அனுமதி வழங்கினார் சஜித். அந்த நம்பிக்கையை ஹக்கீம் கடைசியில் காப்பாற்றினார் என்கின்றனஉள்வீட்டுத்தகவல்கள். ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஹக்கீமை ஆளும் தரப்புப் பக்கம் வந்துவிடுமாறுஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக ஆளும் தரப்பு முஸ்லிம் மக்களுக்காக எதையும்செய்யவில்லைஎனவும், எதிர்பார்த்ததைநிறைவேற்றவில்லை எனவும்சுட்டிக்காட்டியஹக்கீம்,இந்த நிலையில் எப்படி ஆளும் தரப்புடன் இணை முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு ஹக்கீம் இவ்வாறான பதிலை வழங்கியதற்கு பல காரணங்கள் உள்ளன. ஹக்கீமின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இதற்கு முன்னர் இதேபோன்று, ஆனால் ஹக்கீமுக்குத் தெரியாமலேயே ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். ஜனாதிபதியைச் சந்தித்து ஆளும் தப்புக்குத் தாவுவது தொடர்பாகப் பேசத்தான் இந்தச் சந்திப்பு. இது ஹக்கீமுக்கும் தெரியும்.

இது தொடர்பாக தகவல் வெளியானதும் ஹக்கீம் கடும் கோபமடைந்தார். பல சந்தர்ப்பங்களில், ஹக்கீம் பல இடங்களில் பகிரங்கமாக, இது மிகவும்அசிங்கமானஅரசியல்நகர்வு என்று விமர்சித்திருக்கிறார். எமது நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதிசெயலகத்திற்குஅழைத்து வந்து கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்காமல் அவர்களுக்கு பல்வேறுசலுகைகளைவழங்குவது தவறு. இதை உடனடியாக நிறுத்த வேண்டும்... என்றெல்லாம் தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியில் அவரால் எப்படி ஜனாதிபதி அழைத்ததுமே அவர் பக்கம் சாய முடியும்?

ஆனால் மனந்தரளராத விக்கிரமாதித்தியன் மாதிரி ரணில் தனதுமுயற்சியில்மீண்டும்மீண்டும் ஈடுபட்டுக்கொண்டேஇருக்கிறாராம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயக்கிரியைகள் இடம்பெற்று அவரதுஇறுதிப்பயணம்தொடங்கும்.

திருகோணமலை தபால் கந்தோர் வீதியில் உள்ள அவரது பூர்வீக இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிவரையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும். அதனைத் தொடர்ந்து சமயக் கிரியைகள் நடைபெறும். பிற்பகல் 1.30இற்கு அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளன. அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் 3 மணிக்கு இந்துமயானம்நோக்கிபேரணியாக கொண்டு செல்லப்படவுள்ளது.

அவருடைய இறுதி அஞ்சலி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார். பாரதியஜனதாக்கட்சியின்தமிழகத் தலைவர் அண்ணாமலையும் கலந்துகொள்ளவுள்ளார். தமிழ் நாட்டு முதலமைச்சரின் சார்பில் பிரதிநிதியொருவரும் பங்கேற்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. அத்துடன், தென்னிலங்கையைச் சேர்ந்த ஏனைய அரசியல்தலைவர்களும்பங்கேற்கவுள்ளனர். வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், மலையகபிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

வடக்கு,கிழக்கில் இருந்து பெருமளவான பொதுமக்களும் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்பதற்காகத் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

91வயதாகும்இராஜவரோதயம் சம்பந்தன்கடந்தஞாயிற்றுக்கிழமை உடல்நலம் குன்றிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரது பூதவுடல் கொழும்புமற்றும்யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் திருகோணமலைக்கு எடுத்துவரப்பட்டது.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தற்போது உலகம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்கேற்ப, இந்நாட்டின் கல்வி முறையும் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையானகல்விச்சீர்திருத்தங்கள் அமைச்சினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்று நாம் பல கல்விக் கொள்கைகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். அந்தக் கல்விக் கொள்கைகள் அன்றைய காலத்திற்கு ஏற்றதாக இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்பவளர்ச்சியால், கல்வித் துறையில் புதிய சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது பாடசாலைகளில், செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் கல்வியைதொடங்கிசிலவருடங்கள் ஆகிறது. இந்த ஆண்டு நாம் ஆரம்பித்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிளை ஆளும்தரப்பு ஏற்படுத்தும். மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவுப் பாடசாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறுவதில்அண்டைநாடான இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு ஐ.ஐ.டி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவுடன் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கானபேச்சுக்களும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன.

மலேசியாவில் நான் எலான் மஸ்குடன் கலந்துரையாடினேன். அவரது நிறுவனத்தின் இணையத் தொழில்நுட்பம்நாடாளுமன்றத்தில் சட்டம்நிறைவேற்றப்பட்டதன்பின்னர் இலங்கையில்அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும் வாய்ப்பு கிடைக்கும். இன்று தென் மாகாணம் கல்வித்துறையில் அதீத திறமைகளை வெளிப்படுத்தும் மாகாணமாக மாறியுள்ளது. தென் மாகாணத்தின் முதலாவது டச்சு பாடசாலையான பத்தேகம கல்லூரி இன்று தேசிய பாடசாலையாக மாறியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிர்காலத்திற்கு ஏற்ற சந்ததியை உருவாக்கி ஒரு நாடாக உலகையே வெல்லும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது -என்றார்.

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தறிவு விகிதம் 93% ஆக உயர்ந்துள்ளது. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், நவீன வகுப்பறைகள் என்பன அவசியமாகும். அதற்கு இந்தியா வழங்கி ஆதரவுக்கு நன்றி.

இன்றுதென்மாகாணத்திலுள்ள இருநூறு பாடசாலைகளில் நவீன வகுப்பறைகள்உள்ளன. 2,000கெப் கணினிகள் சொந்தமாக உள்ளன. எதிர்காலத்தில்பாடசாலைகள்டிஜிட்டல் மயமாக்கலில் உள்வாங்கப்படும். அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப்பின் ஊடாக இணைக்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளைடிஜிட்டல்மயமாக்க எதிர்பார்க்கிறோம்.

இதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிஅளிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவைப் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களில் 93% தொழில் சந்தையில் தொழில்வாய்ப்புக்கள் உள்ளன. நவீனதொழில்நுட்பத்தின் மூலம்உலகைவெல்லும்வாய்ப்பை நாம்பயன்படுத்தவேண்டும்-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய நூலகம் பணிப்பாளரால் திறந்து

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வாசிகசாலை நேற்று (சனிக்கிழமை) வைபவரீதியாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள கலாச்சார மேம்பாட்டு பணிப்பாளர் கலாநிதி பிரசாத் ரணசிங்கவால் திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு பிரதம அதிதியுடன் இணைந்து இந்த வாசிகசாலையை திறந்து வைத்தார். மேலும் இந்த நிகழ்வில் கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் அஸ்வான் மௌலானா, உப செயலாளர் நூருல் ஹுதா உமர், பொருளாளர் ஏ.பி.எம். நௌஸாத் உட்பட நிறைவேற்று சபையினரும், பிரதேச மூத்த இலக்கியவாதிகள், கல்விமான்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது வாசிகசாலைக்கான அங்கத்துவம் தொடங்கி வைக்கப்பட்டதுடன், பிரதேச எழுத்தாளர்கள் தமது நூல்களை குறித்த வாசிகசாலைக்கு அன்பளிப்பு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மோட்டார் சைக்கிள் மற்றும் கப் வாகனம் நேருக்கு நேர் மோதி குடும்பஸ்தர் இறப்பு

பூநகரி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட குடமுருட்டி பாலத்துக்கு அருகில் ஏற்பட்ட வீதி விபத்தில் இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளார்.

பரந்தன் பகுதியில் இருந்து பூநகரி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த கப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் கிளிநொச்சி கோனாவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் கோ.புருசோத்மன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கப்ரக வாகனததில் பயணித்த மூன்று பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை கழுக்காக சேர்க்கபட்டுள்ளனர் அத்துடன் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05-113)






காலைக்கதிர் Kalaikkathir

# தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதே சிறந்த தெரிவு

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்துவரும் நிலையில், மீண்டும் ஸ்திரமற்ற நிலை தோன்றுவதற்கு வழிகோலும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக்கூடாது எனவும், ஆகவே ஜனாதிபதித்தேர்தல்களைப் பிற்போடுவதே தற்போதைய சூழ்நிலையில் சிறந்த தீர்மானமாக அமையும் எனவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டிய தினம் தொடர்பில் நீதிமன்றத்தால் வியாக்கியானம் வழங்கப்படும் வரை தற்போது திட்டமிடப்பட்டுள்ளவாறு ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கான உத்தரவைப் பிறக்குமாறுகோரி தொழிலதிபர் சி.டி.லெனாவாவால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் பின்னணியில், தமிழ்த்தேசிய கட்சிகளில் ஒன்றான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதித்தேர்தலைப் பிற்போடுமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அது நாட்டுக்கு நன்மையளிப்பதாகவே அமையுமெனத் தெரிவித்துள்ளார்.

'தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதித்தேர்தலை நடத்தினால், எந்தவொரு வேட்பாளராலும் 50 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது. எனவே கட்சிகள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் செயற்படவேண்டியிருக்கும்' எனச் சுட்டிக்காட்டியுள்ள விக்னேஸ்வரன், அது தற்போது நாட்டில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் ஸ்திரத்தன்மையை மாற்றியமைக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். 'எமது பொருளாதாரம் தற்போது படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மீண்டும் ஸ்திரமற்றத்தன்மை தோன்றுவதற்கு வழிகோலுவதானது நாட்டின் நலனுக்குப் பாதகமானதாக அமையும். ஜனாதிபதித்தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயகத்துக்கு முரணானதெனில், அவ்வாறு இருக்கட்டும். தற்போதைய சூழ்நிலையில் நாட்டுமக்களின் நிலை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மக்களின் பாதுகாப்பு என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதே சிறந்ததாகும்' எனவும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி, எம்மால் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடமுடியாது எனவும், ஆகவே தேர்தல்களைப் பிற்போடுவதே சிறந்த தீர்மானம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், இவ்விடயத்தில் இறுதித்தீர்மானம் உயர்நீதிமன்றத்தின் வசமே இருக்கின்றது எனவும் கூறியுள்ளார். (05)

## போதைப் பொருளை கடத்திய ஆலா என்ற இளைஞனுக்கு 14 நாள்கள் விளக்கமறியல்






(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு போதைப்பொருள்களை விநியோகித்து வந்த ஆலா என்ற இளைஞனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த வியாழக்கிழமை விசேட தகவல் ஒன்றை அடுத்து அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸ் குழுவினர் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது குறித்த ஆலா என்ற பறவையின் செல்லப்பெயர் கொண்ட 39 வயதுடைய முஹம்மது இஸ்மாயில் அஸ்மீர் இயற்பெயருடைய இளைஞனை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்ட இளைஞனின் உடைமையில் இருந்து 11 கிராம் 300 மில்லி கிராம் கஞ்சாவை மீட்டுள்ளது.

பின்னர் மறுநாள் வெள்ளிக்கிழமை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் சந்தேக நபரை வைக்குமாறு உத்தரவிட்டார்.குறித்த ஆலா என்ற பறவையின் செல்லப்பெயர் கொண்ட சந்தேக நபர் இரண்டாவது தடவையாக போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதாகி உள்ளமையும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதே வேளை 22 வயதுடைய இளைஞன் கடந்த புதன்கிழமை போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## தர்மபுரத்தில் மணலேற்றிய குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்களும் சாரதிகளுடன் கைது





தருமபுர பொலிஸாருக்கு கடந்த வியாழக்கிழமை கிடைக்கப்பெற்ற தகவளுக்கமைவாக தருமபுர போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் அனுமதி பாத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணித்த நான்கு டிப்பர்களும் அதன் சாரதிகளும் தருமபுரபொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனை மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலீஸ் விசாரணைகளின் பின்னர் பொலீஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடையப் பொருள்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றல் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபும பொலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (05 - 113)

## கல்முனை தெற்கில் பற் சிகிச்சை முகாம்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் பற் சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல் சிகிச்சை முகாம் இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடமபெற்றது.

கல்முனை கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜி.எம்.றிசாதின் நெறிப்படுத்தலின் கீழ் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர். எம்.அஸ்மியின் தலைமையில் இடம்பெற்ற இப்பற் சுகாதார முகாமில், பற் சுகாதார நிபுணர் டாக்டர் திருமதி. எம். ஆர்.எஃப். சுர்பா, பற் சுகாதார அதிகாரி டாக்டர் திருமதி பரிஹா, ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் பற் சுகாதார சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எம் பாஷரூக், பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எம். ஜ/னைட் ஆகியோர் இணைந்து மாணவர்களின் பற் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகளிலும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் ஒரு பனிப் போர் நோக்கி உலகம் விரைகின்றதா?

உக்ரைன்போரில்தீர்க்கமானவெற்றியைப்பெறமுடியாதுதிணறும் ரஷ்யா, அதன் எதிர்வினையாக அமெரிக்க எதிர்ப்பு நாடுகளை அண சேர்ப்பதில் மும் முரம் காட்டிவருவது உலகம் மீண்டும் ஒரு பனிப் போரை நோக்கி விரைகிறது என்கிற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

தனது அயல் நாடான உக்ரைன் நேட்டோ' கூட்டமைப்பில் இணைவது தனக்கு அச்சுறுத்தல் என்று குற்றஞ்சாட்டிய ரஷ்யா, 2022 மாசி 24–அன்று போர் தொடுத்தது. போர் தொடங்கியபோது படைப் பலத்தில் ரஷ்யா மலையாகவும் உக்ரைன் மடுவாகவும் காணப்பட்டதால் உக்ரைனை ரஷியா சுலபமாக வீழ்த்திவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆயுத, பண உதவி காரணமாக, ரஷியாவுக்கு கடந்த இரண்டரை ஆண்டுகளாக உக்ரைன் கடும் சவாலாக இருந்து வருகிறது. எதிர்பார்த்தவெற்றியைரஷ்யாவால்அடையமுடியவில்லை. கைப்பற்றிய பகுதிகளை மட்டும் தன்னுடன் இணைத்துக்கொண்டு மெல்ல மெல்லப் போரைத் தொடர்ந்து வருகின்றது ரஷ்யா.

அமெரிக்க, மேற்குலக நாடுகளின் இந்த நகர்வால் அதிருப்தியடைந்திருக்கும் ரஷ்ய அதிபர் புடின் எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் மேற்கு நாடுகளுக்கு ஆதரவாக இல்லாத நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அணிதிரட்டி வருகிறார்.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் பல ஆண்டுகளாகப் பகை நிலவிவருகிறது. ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு முனைப்புகளைக் காரணம் காட்டி அந்த நாட்டின் மீது கடும் பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இதனால் ஈரானுடன் உறவுகளை மேம்படுத்திக் கொண்ட ரஷ்யா, உக்ரைனுடனான போருக்காக ட்ரோன்களை ஈரானிடம் இருந்தே வாங்கியுள்ளது. இதன் மூலம் பொருளாதார ரீதியாக ஈரானை வலுப்படுத்த அது முயற்சிக்கின்றது.

சீனாவுக்கும்அமெரிக்காவுக்கும்,ரஸ்யாவுக்கும்அமெரிக்காவுக்கும் இடையேயான பகைமை அனை வரும் அறிந்ததே. சீன அதிபர் ஷி ஜின்பிங்கைசர்வாதிகாரிஎன்றும்,ரஷியஅதிபர்புதினைகொலைகாரர் என்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அண்மையில்தான் விமர்சித்திருந்தார். உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுத உற்பத்திக்கான தொழில்நுட்ப உதவிகளை ரஷ்யாவுக்கு சீனா வழங்கி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

இப்படி அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டில் உள்ள சீன அதிபர் ஜின்பிங்கை கடந்த மே மாதத்தில் தலைநகர் பெய்ஜிங்கில் புடின் சந்தித்தார். உலக அரசியல் சமநிலையை இருநாடுகளின் நல்லுறவு உறுதி செய்யும் என்று இருதலைவர்களும் கூறியது உலக அரசியலின் போக்கு அமெரிக்கா, அதன் எதிர்நாடுகள் என்று மாறுவதற்கான முன்மொழிவு போன்றே தென்பட்டது.

அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான பகைமையைப் பயன்படுத்தி அதனையும் தனது அணியில் சேர்த்துக்கொள்வதில் ரஷ்யா ஆர்வம் காட்டி வருகின்றது. அந்த நாட்டுடன் இணைந்து கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டுவருகிறது. இதற்கு முன்னர், வடகொரியா அணு ஆயுதத் தயாரிப்புக்கு முனைந்தபோது, அதை முடக்க முயற்சித்த நாடுகளுக்கு புடின் ஆதரவளித்தார். அணு ஆயுதத் தயாரிப்புக்காக வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அதற்கு ஆதரவாக ரஷியா வாக்களித்தது.

இருப்பினும், உக்ரைன் போர் புடினை வடகொரியாவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க வைத்திருக்கிறது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கடந்த செப்டம்பரில் ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அதிபர் புடினைச் சந்தித்தார். அப்போது உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவு அளித்ததுடன் ஆயுத உதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து, கடந்த 24 ஆண்டுகளில் முதல்முறையாக ரஷிய அதிபர் புதின் கடந்த ஆனி மாதம் வடகொரியா சென்றார். எதிரி நாடுகளின் தாக்குதலுக்கு உள்ளாகும்போது பரஸ்பரம் இராணுவ உதவி செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை இரு நாடுகளும் ஏற்படுத்திக் கொண்டிருப்பது, சர்வதேசப் பார்வையாளர்களை கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

இந்தசந்திப்புக்குப்பின், 'உக்ரைனுக்குஆயுதங்கள்அளித்துவரும் நாடுகள், எங்களுடன் நேரடியாகப் போரிடவில்லை என்று கூறிவருகின்றன. அப்படியெனில், வடகொரியா உள்ளிட்ட அந்த நாடுகளின் எதிரிகளுக்கு சக்தி வாய்ந்த ஆயுதங்களை அளிக்கும் உரிமை எங்களுக்கும் உள்ளது' என்று புதின் கூறியிருப்பது அந்தப் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் மற்றொரு பகை நாடான வியத்நாமுக்கும் புதின் கடந்த ஆனி மாதம் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அதிபர் டே லாமுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இப்படி தனது அணியைப் பெருப்பிப்பதில் புடின் செலுத்திவரும் கவனம்மீண்டுஇந்தஉலகில்பனிபோரைத்தோற்றுவிக்கப்போகின்றது என்கிற அச்சத்தையே ஏற்படுத்துகின்றது.



# உறவும் நட்பும் கண்ணெனத் தகும்!

**என். பத்ரி**



நமது சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். இதில் நமது அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை போன்ற உறவுகள் அடங்கும். இவர்களை நம்மால் தேர்வு செய்யவும் முடியாது! மாற்றி அமைக்கவும் முடியாது!

நம்மிடையே கூட்டுக் குடும்ப முறை முற்றிலும் மறைந்துவிட்டது எனலாம். குடும்பங்களில் கணவன், மனைவி, ஒரே ஒரு குழந்தை கொண்ட தலைமுறை துளர்விட ஆரம்பித்துவிட்டது. உடன்பிறப்புகளும், உண்மையான நட்புகளும் ஒரு சிலருக்கு மட்டுமே அமைகின்றன.

இந்நிலையில் நமது குடும்பங்களில் அரிதாக இருக்கும் உடன்பிறப்புகளும் நட்புகளும் அற்ப விஷயத்துக்கெல்லாம் கோபித்துக் கொண்டு ஒருவரோடு பேசாமல் இருக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. சிலரின் துரதிருஷ்டம், இவர்களின் அருமை உயிருடன் இருக்கும் வரை தெரிவதில்லை. அவர்கள் உயிரோடு இருக்கும் போதே மனதில் உள்ள கருத்து வேறுபாடுகளை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய முடியவில்லையே என்று காலங்கடந்து சிந்தித்தென்ன பயன்?

உறவின் உண்மையான பலத்தை 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற முதுமொழி உணர்த்தும். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் தன்னுடைய அண்ணனே அரசனாக இருக்க வேண்டுமென துறவறம் பூண்டார்.

இளம் குமணன், 'என் அண்ணன் குமணன் தலையினைக் கொண்டு வந்தால் ஆயிரம் பொற்காசு கொடுப்பேன்' என்றார். காட்டில் தலைமறைவாக இருந்த அண்ணனை சந்தித்தார் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர். அவர் தலையைப் போன்றே பொம்மைத் தலை ஒன்றை பெற்று வந்து தம்பியிடம் கொடுத்து பரிசினைக் கேட்டார். இதைக் கண்டு அதிர்ந்து போன தம்பி அதை அண்ணனின் உண்மையான தலை என்று நம்பினார். அதனால், அவர் தன் தவறை எண்ணித் திருந்திக் கதறியழுதார்.

சகோதர பாசத்தையும் நட்புறவுகளின் ஆழத்தையும் உணர்த்தும் எண்ணற்ற வரலாற்றுக் காட்சிகளை நமது இலக்கியங்கள் நமக்குச் சொல்லித் தருகின்றன.

"குளம் இல்லையென்றால் இறந்து போகும் மீன் மாதிரி நான். நீ இல்லையென்றால் நான் இறந்து போவேன்" என்று தம்பி இலக்குவன் இராமனிடம் கூறுவதாக கம்ப ராமாயணத்தில் ஒரு காட்சி வருகிறது. இன்றும் குடும்பத்தில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் இராமன், இலக்குவன் என்று பெயர் வைக்கிற பழக்கம் நம் நாட்டில் இருக்கிறது.

இராமனின் அம்பினால் அடிபட்டு இறக்கும் வாலி, "என் தம்பி சுக்ரீவன் ஓர் அவசர புத்திக்காரன். அவன் ஏதாவது தவறு செய்தால், அவனை மன்னித்துவிடு" என்று இறப்பதற்கு முன்னால் இராமனிடம் வேண்டிய பிறகே இறந்ததாக கம்ப ராமாயணம் கூறுகிறது.

அண்ணன் இராவணனுக்கு ஆதரவாக இருந்து தம்பி கும்பகர்ணன் உயிரையும் இழக்கிறான். "அவனின் பக்கம் நின்று, அவனுக்கு ஆறுதல் சொல்ல ஓர் உடன்பிறப்பாவது இருக்கவேண்டும்" என்று அவன் எண்ணுகிறான்.

இராமனின் மீது மிகுந்த அன்பு கொண்டவன் வேட்டுவர்களின் தலைவனான குகனை, தன் தம்பியருள் ஒருவனாக ஏற்றுக் கொண்டான். குந்தவை நாச்சியார் என்னும் அக்காவின் அறிவுரைப்படி தம்பி ராஜராஜ சோழன் தஞ்சை பெருவுடையார் கோயிலைக் கட்டினான். அதனால், வரலாற்றில் இன்றும் நிற்கிறான். தாய் -பிள்ளை, கணவன்-மனைவி உறவுகளுக்கு ஈடாகப் போற்றப்படுவது உண்மையான நட்பாகும். நட்புக்காகத் திருக்குறள் நான்கு அதிகாரங்களையும், நாலடியார் மூன்று அதிகாரங்களையும் வழங்கியிருக்கின்றன.

அதியமானுக்கும், இளந்திரையனுக்கும் இடையே போர் நடைபெற இருந்தது. அதனை அவர்கள் இருவருக்கும் தனக்கும் இருந்த நெருக்கமான நட்பினைக் கொண்டு தவர்த்தவள் ஔவையார்.

உயிர் காக்கவல்ல நெல்லிக்கனியைத் தான் உண்ணாது தமிழைத் தம் நாவால் ஆட்சி செய்துவந்த ஔவையாருக்குத் தந்த அதியமானின் நட்பு பாராட்டுக்குரியது.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரை நேரில் காணாமலேயே நட்பு கொண்டவன். நீரும் உணவும் இன்றி வடக்கிருந்து உயிர் நீத்தான் சோழன். இறந்த ஓரிரு நாள்களில் அவன் கூறியதைப் போன்றே அவருடைய நண்பர் பிசிராந்தையர் அங்கு வந்தார். சாவின் விளிம்பிலும் மன்னனின் நட்பின் ஆழத்தை அவர் உணர்ந்தார். மன்னன் வடக்கிருந்து உயிர்நீத்த இடத்திற்கே சென்றார். அங்கு தானும் உண்மையான நட்பிற்காக வடக்கிருந்து உயிர்நீத்தார். கண்ணன் - குசேலன் நட்பின் பெருமையைப் பற்றியும் நன்கு அறிவோம்.

பாரியின் நண்பரான கபிலர் போருக்கு ஆயத்தமாக இருந்த சேரர், சோழர், பாண்டியன் மூவரையும் சந்திக்கின்றார்."'பாரி பெருங் கொடைவள்ளல். இரந்து கேட்டால் பறம்பையே தாரை வார்த்து விடுவான். இதற்கு ஏன் இவ்வளவு முற்றுகை?' எனக் கூறி போரினை நிறுத்தி ஒரு சிறந்த நண்பனாக பரிமளிக்கிறார்.

ஆனால், அணுக் குடும்பங்கள் (நியூக்கிளியர் பமிலி) பெருகிவிட்ட இந்த அவசர யுகத்தில் 'அண்ணன் எப்போது போவான்? திண்ணை எப்போது காலியாகும்?', 'ஐந்து வயதில் அண்ணன் தம்பி பத்து வயதில் பங்காளி' போன்ற 'வசனங்கள்' மவுசு பெற்று, பிள்ளைகள் அதைப் பற்றிக் கொண்டு வருகின்றனர்.

உறவின் பெருமையையும், நட்பின் பெருமையையும் நாம் இனியேனும் உணரவேண்டும். காலம் நமக்கு கொடுத்த மிகப்பெரிய கொடையே இந்த உறவுகளும் நட்புகளும். இவற்றை தொடர்ந்து நேசித்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு நம் அனைவருக்கும் உள்ளது.

உறவுகளிலும் நட்புகளிலும் இனியும் குறைகளைப் பாராட்டாமல் அனுசரித்துப் போக நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இவற்றை நமது வாழ்வின் இரண்டு கண்களாகப் போற்றிப் பாதுகாக்கவேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# முத்து மீரானின் ஜனாசா நல்லடக்கம்

(பாறுக் ஷிஹான்)

பலரின் இலக்கிய வாழ்வில் தூண்டுகோலாக அமைந்த ஓர் இலக்கிய மாமேதை நிந்தவூரின் முத்து என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் அல்ஹாஜ். எஸ். முத்து மீரானின் ஜனாசா நல்லடக்கம் வெள்ளிக்கிழமை இரவு ஜனாசா தொழுகையின் பின்னர் நிந்தவூர் பொது மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பலரின் இலக்கிய வாழ்வில் தூண்டுகோலாக அமைந்த ஓர் இலக்கிய மாமேதை நிந்தவூரின் முத்து என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் அல்ஹாஜ். எஸ். முத்து மீரான் வெள்ளிக்கிழமை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பரப்பில் பன்முக ஆளுமையாக விளங்கிய மறைந்த சட்டத்தரணி எஸ். முத்துமீரான், கல்வி, சட்டம் சார்ந்த துறைகளிலும் கூட பாரிய பங்களிப்பை செய்த திருப்தியில் இவ்வுலகையை விட்டுப் பிரிந்திருக்கிறார்.

கிழக்கிலங்கையில், குறிப்பாக நாட்டின் தென்கிழக்கில், அம்பாறை மாவட்டத்தில், நில வளமும் நீர் வளமும் மிக்க நிந்தவூரில் பிறந்து மண்வாசனை கமழும் வண்ணம் தமது ஆக்கங்களைப் படைத்தளித்தவராக முத்துமீரான் வரலாற்றில் இடம் பெறுகிறார்.

எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், கட்டுரையாளர், உருவகக் கதாசிரியர், நாட்டார் இலக்கிய ஆய்வாளர், நாடறிந்த ஓர் பிரபல்யமான சட்டத்தரணி என பன்முக அடையாளம் கொண்ட ஆளுமை, நிந்தவூர் ஜ/ம்மா பள்ளிவாயலின் தலைவராகவும், பிரதேச சபையின் உறுப்பினராகவுமிருந்து பல ஆலோசனைகளையும் வழிநடாத்தல்களையும் செய்து ஊரின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர், எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் மனித நேயராக, மற்றவர்களோடு அன்போடும் பண்போடும் பாசத்தோடும் பழகும் ஓர் உறவு இன்று இவ்வுலகைவிட்டு பிரிந்தது எல்லோருக்கும் பேரிழப்பாகும்! இலங்கையில் மட்டுமல்லாது, கடல் கடந்து, தமிழகத்திலும் கேரளத்திலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற நாடுகள் பலவற்றிலும் அவர் தமது எழுத்துக்களின் வலிமையாலும், வீரியத்தினாலும் மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கின்றார்.

எங்களது இளமைக் காலத்தில், பொலன்னறுவை தம்பாளையில் எங்கள் தந்தையார் கடமையாற்றிய காலத்தில் இருந்தே அங்கு ஆசிரியராக அவர் எங்களுக்கு அறிமுகமாகியிருந்தார். அன்று தொட்டு இன்று வரை அவரது ஆக்கங்கள் என்றால், அவை சிறுகதையாக, உருவகக் கதையாக, கவிதையாக, கட்டுரையாக, நாடகமாக, நாட்டார் பாடலாக எவையாயினும் அவற்றால்பலரும் ஈர்க்கப்பட்டுள்ளனர்.

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட உருவகக் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய முதற் தொகுதியான 'உருவகக் கதைகள்' நூல் தென்னிந்தியா கூத்தா நல்லூர் தென்றல் மன்றத்தால் 25.02.1982ஆம் ஆண்டு கவிஞர் திலகம் சாரணபாஸ்கரனால் வெளியிடப்பட்டது. இவர் இருநூற்றுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், பல நூறு கவிதைகளையும் எழுதியுள்ளார்.அத்தோடு இவர் நாட்டார் இலக்கியங்களை ஆய்வு செய்து நூல்களையும் வெளியிட்டுள்ளார். அரசியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். இவர் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு வந்த நிலையிலேயே சட்டக் கல்லூரி பரீட்சையில் சித்தியடைந்து சட்டத்துறையில் கற்றலை மேற்கொண்டு சட்டத்தரணியாக தொழில் புரிந்தார்.இவர் நிந்தவூர் பெரிய ஜ/ம்ஆப் பள்ளிவாசல் தலைவராகவும் இருந்து ஊருக்கு சேவையாற்றியுள்ளார்.இவர் நிந்தவூர் மண்ணுக்கு பெரும் புகழை இலக்கியத்துறையில் பெற்றுக் கொடுத்துள்ளார். இலங்கையில் மட்டுமன்றி இந்தியா- தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள், அரசியல்வாதிகளுடன், இலக்கியவாதிகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டவர்.

தமிழ் நாட்டில் நடைபெற்ற தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகள் பலவற்றில் கலந்துகொண்டு தமிழ் மொழி மற்றும் இலக்கிய ஆய்வுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கைக்கு அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்திற்கு உரித்தான நாட்டார் பாடல் இலக்கியத்தை ஆய்வு செய்து, அவை அருகி வரும் காலத்தில் அவற்றை தனித்துவமான ஒரு கலை வடிவமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபல்யப்படுத்துவதில் முத்துமீரான் போன்ற மிகச் சிலரே முன் நின்றனர். தன் உயிரோடு ஊறிப் போயிருந்த இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு அப்பால் ஆசிரியர் பணியை சிறப்பாக ஆற்றிவிட்டு, சட்டத்துறையிலும் பிரவேசித்து சிரேஷ்ட சட்டத்தரணியாக பிரகாசித்த ஒருவராக முத்துமீரான் இனங்காணப்பட்டார். (05)

# சம்பந்தன் ஐயாவின் இறுதிக் கிரிகை தினமான இன்று வெள்ளைக்கொடி பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்குக

## ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சட்டத்தரணி இரா. சம்பந்தனின் இறுதிக்கிரிகைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளதுடன் அதில் இலங்கையின் அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டு முக்கிய அரசியல்வாதிகளும் கலந்துகொள்ள உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது இறுதிக்கிரிகை இடம்பெறும் இன்று கிழக்கின் சகல பிரதேசங்களிலும் வெள்ளைக் கொடியை பறக்கவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்த இலங்கையர்கள் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் முன்வர வேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலீலுர்ரஹ்மான் அறிக்கை ஒன்றினூடாக கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக தனது வாழ்நாள் பூராவும் அயராது பாடுபட்ட அரசியல் ஆளுமையான சம்பந்தன் ஐயாவுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்த இலங்கையர்களான நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அன்னாரின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் திருகோணமலை மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக் கொள்ளும் இந்த சந்தர்ப்பத்தில் அவரது மக்கள் பணியையும், அரசியல் சேவைகளையும் கௌரவிக்கும் விதமாக நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக அவரது இறுதிக்கிரிகை இடம்பெறும் இன்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கின் சகல பிரதேசங்களிலும் வெள்ளைக்கொடியை பறக்கவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்த இலங்கையர்கள் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் முன்வர வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஹீராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நிலையான, சுபீட்சமான நாடொன்றைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணிலின் தலைமை நாட்டுக்கு அவசியம்

## வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் வலியுறுத்து





(எம் சியாஜ் )

'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்ட காணி உரிமையாளர்களுக்கான காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு காணி உரிமையாளர்களுக்கான 'உறுமய' காணி உறுதிகளை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட், சுதந்திரம் கிடைத்தது தொடக்கம் தங்கள் காணிகளுக்கான முழுமையான உரிமைக்குப் பதிலாக தற்காலிக அனுமதிப்பத்திரம் மட்டுமே அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்நிலையை மாற்றி, காணி உரிமையாளர்களுக்கு அவற்றின் முழு உரிமையையும் வழங்கும் வகையில் உறுமய தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலங்கையின் விவசாய உற்பத்திகள் தன்னிறைவு காண்பது மட்டுமன்றி ஏற்றுமதி செய்யும் நிலைக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும். அதன் ஒரு படியாகவே விவசாயப் பெருமக்களுக்கு அவர்களின் காணிகளுக்கான முழு உரிமை வழங்கப்படுகின்றது.

இந்நாடு ஒரு காலத்தில் இங்கு வாழ்ந்த மக்களுக்கு கூட இருக்க முடியாத நெருக்கடி நிலையில் சிக்கித் தவித்தது. அதன்போது எரிபொருள், கேஸ், அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட அனைத்துக்கும் பாரிய தட்டுப்பாடு காணப்பட்டது. பொதுமக்கள் இந்த நாட்டை விட்டும் வெளியேறுவதற்கு வரிசைகளில் காத்து நின்றார்கள் ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் துணிச்சலான, தூரதிருஷ்டியான தலைமைத்துவத்தால் இன்று நிலை மாறிவிட்டது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இன்று இந்நாட்டுக்கு வருவதற்கு வரிசையில் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள். நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தும் இந்நாட்டில் நிலவ வேண்டும். நாடு இன்னும் அபிவிருத்தி அடைந்து, சுபீட்சமடையவேண்டும். அதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் இந்நாட்டுக்குத் தொடர்ந்தும் தேவை. அதனை அவர் வழங்க வேண்டும் என்பதே இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

நாடு நெருக்கடியில் இருந்தபோது அதனைப் பொறுப்பேற்க முடியாது ஓடியொளிந்தவர்கள் இன்று நாட்டை மீட்டெடுக்க தங்களால் முடியும் என்று வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இரவில் விழுந்த படுகுழியில் பகலிலும் விழ எங்கள் மக்கள் தயாராக இல்லை. அவர்களுக்கு உண்மைதெரியும். தங்களையும் நாட்டையும் மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்நாட்டு மக்கள் உரிய முறையில் நன்றிக் கடன்செலுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு எனக்கு உள்ளது என்றும் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ராஜாங்க அமைச்சர்களான சாந்த பண்டார, டீ. ஹேரத், குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் , நாடாளுமன்ற உறுப்பினர் சமன்பிரியஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ , அசங்க நவரத்ன, சுமித் உடுகும்புற , மஞ்சுளா திசாநாயக்க , முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியசம், வடமேல் மாகாண சபையின் தவிசாளர் டிகிரி அதிகாரி , ஜனாதிபதிசெயலாளர் சமன் ஏக்கநாயக்க , மாகாண பிரதமசெயலாளர் தீபிகா கே குணரத்தின, குருநாகல் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட இன்னும் பலர் கலந்துகொண்டிருந்தனர். (05)



## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லும் எனது பணியை முடித்துவிட்டதால் இனி தேசத்தின் எதிர்காலத்தை நான் வைத்திருக்கப்போவதில்லை. நாட்டின் எதிர்காலம் மக்கள் கையிலேயே உள்ளது. தேர்தல் ஆணையம் விரைவில் ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கும். எனவே. தேசத்தின் தலைவிதியை தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும்,

தேசம் எங்களின் பாதையில் செல்ல வேண்டுமா அல்லது வேறு வழியில் செல்வதா என்பதை மக்களேதீர்மானித்துக்கொள்ளட்டும்" என்றார் அவர்.

'எவரும் தயாராக இல்லாத போது நான் தேசத்தைக் பாப்பாற்ற வேண்டியிருந்தது. அன்று ஜே.வி.பியைக் காண வில்லை. மற்றவர்களும் காணாமற் போனாஸஸஸஸ. நான் உலக வங்கி, ஏடிபி மற்றும் ஐஎம்எஃப் ஆகியவற்றுடன் பேசினேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சமாளித்தார். நான் பதவியேற்பதற்கு முன் இந்தியா மற்றும் பங்களாதேஷிடம் இருந்து உதவி பெற்றார்கள், ஐ.தே.கவின் கடந்தகாலத் தலைவர்களைப் பின்பற்றி எனது கடமையை செய்துள்ளேன்.

இப்போது கையூட்டு வழங்க முடியாது. 2020 தேர்தலின்போதுகூட இதனை நான் கூறினேன். எமது சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் நாடு நெருக்கடிக்கு உள்ளாகியிருக்காது. எனினும்ஐக்கியதேசியக்கட்சியினர் வேறு வழியில் சென்று புதிய கட்சியை உருவாக்கியுள்ளனர். தற்போது கட்சி அரசியலை மறக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜெனிவாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிலையான ஆளும் தரப்பு ஒன்று இல்லாமல் இருப்பதன் காரணமாகவும் பேரவைக் கூட்டம் நடைபெறும் காலப்பகுதி இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பரப்பரபான காலமாக இருப்பதன் காரணமாகவும் இலங்கை தொடர்பில் மற்றொரு தீர்மானத்தைக் கொண்டுவருவது பொருத்தமல்ல என்று தீர்மானத்திற்கான இணை அனுசரணை நாடுகள் கருதுவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பேரவையின் 40/1 தீர்மானத்தின்படி இலங்கை ஆளும் தரப்பு எதனையும் நிறைவேற்றவில்லை. இதனால் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரது எழுத்து மூல அறிக்கை இலங்கை மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியிருந்தும் புதிய தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படமுடியாத சூழ்நிலை காணப்படுமாயின், ஏற்கனவே இருக்கும் தீர்மானத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதன் மூலம் இலங்கை மீதான கண்காணிப்புப் பொறிமுறையைத் தொடர முடியும் என்று தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் எதிர்பார்க்கின்றன.




காலைக்கதிர் Kalaikkathir

## மருத்துவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகை





கடற்தொழில் அமைச்சரும் - மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்திய அத்தியட்சகருடன் வைத்தியசாலை நிலைவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

அவர் நேற்று (சனிக்கிழமை) விஜயம் செய்துள்ளதுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் கடந்த இரு தினங்களாக வைத்திய சேவைகளை புறக்கணித்து வரும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வைத்தியசாலையை மேம்படுத்த தன்னால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளின் போது ஒரு சில வைத்தியர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் வைத்தியசாலையை இவ்வாறானதொரு இக்கட்டு நிலைமைக்கு கொண்டு சென்றிருப்பதாக வைத்திய அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக கடந்த 24 மணித்தியாலங்களாக தனி ஒரு வைத்தியராக நின்று வைத்தியசாலையை இயங்க வைத்து நோயாளர்களை காப்பாற்றி வருவதாகவும் வைத்திய அத்தியட்சகர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதனைவிட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் சத்திரசிகிச்சைக் கூடம் ஆகியவற்றை இயங்க வைக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் -ஆளணி காணப்படுவதாகவும் வைத்திய அத்தியட்சகர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார் . இதன்போது வைத்தியசாலையில் கூடிய பொதுமக்கள் வைத்தியசாலை நேற்று இரவுக்குள் வழமை போன்று இயங்க வேண்டும் இல்லையேல் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா அவர்களுக்கு ஆதரவளித்தும் - வைத்தியசாலையை இயக்கக் கோரியும் மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்போம் எனவும் பொதுமக்கள் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியாப் பல்கலையின் கல்வி சாரா ஊழியர்கள் கறுப்புக்கொடி போராட்டம்










வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் சத்தியாக்கிரக போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில், வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று (சனிக்கிழமை) கறுப்பு நிற உடையடைந்து, கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுவரும் நிலையில், துணைவேந்தர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எவ்வித தகவலையும் தமது சார்பில் வெளியிடவில்லை என்பதைக் கண்டித்தும் இந்த கறுப்புக்கொடி போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதேவேளை பல்கலைக்கழகத்துக்கு அருகில் வீதியோரங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

அத்தோடு, துணைவேந்தர்கள் வருகை தந்தபோது வரிசையாக நின்று தமது எதிர்ப்பையும் கல்வி சாரா ஊழியர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். (05)

# மன்னார் மாந்தை மேற்கை சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் இறப்பு

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பல் துறை ஆளுமை மிக்க 42 வயதுடைய குடும்பஸ்தரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடம்பன் வீதியில் உள்ள தனது வீட்டிற்கு முன் நின்று தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த இவரை வாகனமொன்று மோதிவிட்டு சென்றுள்ளது .

இதன் போது குடும்பத்தினரின் உதவியுடன் உடனடியாக அடம்பன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளதுடன் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னர் மரணத்திற்கான காரணம் தெரியவரும் என தெரிவிக்கப்படுகின்றது.

' கம்பிகளின் மொழி பிறேம் ' என அழைக்கப்படும் கோபாலகிருஷ்ணன் கோகுல் பிறேம்குமார் முன்னாள் போராளியாவார்.

ஒரு கால் மற்றும் ஒரு கையையும் இழந்த இவர் பல் துறை சார் ஆளுமை மிக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்!

நுவரெலியா, லிந்துலை பிரதேசத்தில் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் குளிப்பதை காணொளி எடுத்த பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நுவரெலியா நீதிமன்றம் கடந்த 4 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

லிந்துலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் அதிகாரியொருவர் குளிப்பதை இரகசியமாக காணொளி எடுத்துள்ளார். பின்னர், பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் அதிகாரி இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த 4 ஆம் திகதி நுவரெலியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

# கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு 5 பாடசாலைகளுக்கு விடுமுறை

கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமம் தேவாலயத்தை சுற்றியுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி, தெடக முவ கனிஷ்ட வித்தியாலயம், கதிர்காமம் தேசிய பாடசாலை, செல்ல கதிர்காமம் மகா வித்தியாலயம், சசீந்திர குமார ஆரம்ப பாடசாலை மற்றும் கோதமி கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. கதிர்காம உற்சவம் முடிவடையும் வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி அறிவிக்கப்படும் என கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவு தெரிவித்துள்ளது. கதிர்காம உற்சவம் நேற்று (சனிக்கிழமை) முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் இருந்து தனுஷ் கோடிக்கு குழந்தைகளுடன் அகதியாக சென்ற பெண்

## விசாரணை ஆரம்பம்

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு சென்ற 2 குழந்தைகள் மற்றும் அவரது தாய் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மன்னார் மாவட்டம் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த யோகவள்ளி (வயது 34) அவரது குழந்தைகள் அனுஜா (வயது 08) மிஷால் (வயது 05) ஆகிய மூவர் இலங்கையில் உள்ள தலைமன்னாரிலிருந்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடற்பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை சென்றுள்ளனர் இறங்கி உள்ளனர்.

தகவலறிந்து அங்கு வந்த மெரைன் பொலீஸார் தனுஷ்கோடி கடற்கரை பகுதியிலிருந்து விசாரணைக்காக மூன்று பேரையும் மண்டபம் மெரைன் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

விசாரணையில், யோகாவள்ளி விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகதி முகாமில் பிறந்தவர் என்றும் 15 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை திரும்பியவர் அங்கே திருமணம் முடிந்து கணவரை பிரிந்து வாழ்ந்ததும் தெரியவந்தது.

இரண்டு குழந்தைகளுடன் இலங்கையில் வாழ முடியாத சூழலில் வெம்பக்கோட்டை முகாமில் அவரது தாயாருடன் சேர்ந்து வாழ்வதற்காக மீண்டும் அவர் தமிழகம் வந்ததாகவும் தெரியவந்துள்ளது.



விசாரணைக்குப் பின்னர் மூவரையும் மெரைன் பொலீஸார் மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒப்படைத்தனர். (05)

# தலைவர் சம்பந்தன் மறைவுக்கு உலகத் தமிழர் பேரவை அஞ்சலி

*எமது மூத்த தமிழ் அரசியல் தலைவர் இரா.சம்பந்தன உயிர் நீத்தமையிட்டு உலகத் தமிழர் பேரவை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.*

*உலகத் தமிழர் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,*

*அரசியல் வானில் நீண்டகாலம் பிரகாசித்தவர் சம்பந்தன். 36 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், 2015-2018 வரை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியதோடு, கடந்த 23 வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கி நடத்தியும் வந்தார்.*

*தமிழரது உரிமைகளுக்காக தொடர்ச்சியாகக் குரல்கொடுத்துவந்த திரு. சம்பந்தன், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதற்காக தனது அரசியல் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தவர்.*

*1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் அரசியல் எப்போதுமே சிறந்த தலைவர்களின் சேவைகளைப் பெற்றுவந்திருக்கிறது. ஐம்பதுகள் முதல் எழுபதுகள் வரை சிறுபான்மை இனங்களின் மீது சிங்கள பௌத்த தேசியம் ஆதிக்கம் செலுத்திவந்த போது தமிழ்ச் சமூகம் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற முன்னாள் தலைவர்களால் வழிநடத்தப்பட்டு வந்தது.*

*இன ஆதிக்க அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அவர் தமிழ் மக்களை ஒன்றிணைத்து காந்தீய பாதையில் அஹிம்சை வழிப் போராட்டங்களை முன்னெடுத்து வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு சுயாட்சியைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொண்டார்.*

*இந்த பலமான அர்ப்பணிப்புள்ள தலைமைத்துவம் எழுபதுகள் எண்பதுகளின் போதும் மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்தின் கீழ் தொடர்ந்தது. இக்காலகட்டத்தில்தான் அரச ஒடுக்குமுறையும் ஆயுதக் கிளர்ச்சியும் தமிழ் மக்களின் வாழ்வை ஆக்கிரமிக்க ஆரம்பித்தன. இந்த கொந்தளிப்பான போர்க்கால கட்டத்தில்தான் சம்பந்தன் ஒரு முக்கிய, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் தலைவராக ஆனார்.*

*2009இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததும் தமிழ் சமூகம் முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொண்டது. எண்ணற்ற உயிர்களையும் உடமைகளையும் மட்டுமன்றி நம்பிக்கையையும் அது இழந்திருந்தது. வெற்றி கொண்ட இனவாத பேராண்மை அரசு இச்சந்தர்ப்பத்தை கபளீகரம் செய்து மென்மேலும் தமிழர்களை ஓரங்கட்டத் தொடங்கியது.*

*சர்வதேச சமூகம் தமிழ்த் தலைமைகளை அவர்களின் கடந்த கால மற்றும் எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல் குறித்து இருமனப் போக்குடன் பார்த்தது. இந்த முக்கியமான காலகட்டத்தை திரு. சம்பந்தன் சிறப்பாக வழிநடத்தி, கவனமாக கணக்கிட்டுச் செய்த முயற்சிகள் மற்றும் நடைமுறை அரசியல் செயற்றிட்டத்தின் மூலம் தமிழ் அரசியல் தலைமையை உறுதிப்படுத்தி மீளக்கட்டியெழுப்பினார்.*

*இதில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய முக்கிய நிகழ்வாக 2015இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்புலத்தில் திரு. சம்பந்தன் அவர்கள் எடுத்துக்கொண்ட வகிபாகத்தைக் கூறமுடியும். போரினால் தமிழர் சந்தித்த இழப்புகளிலிருந்து சற்று ஆசுவாசம் பெற்று இயல்பு வாழ்வுக்குத் திரும்ப அவரது முயற்சிகள் பெரிதும் வழிகோலின.*

*தமிழர்களின் தேவைகளை மிகவும் ஆணித்தரமாக முன்வைக்கும் அதே வேளையில் பெரும்பான்மை சமூகத்தின் அச்சங்களையும், கரிசனைகளையும், நாட்டின் தேவைகளையும் கருத்தில் கொள்வது திரு. சம்பந்தனின் தனித்துவமான பண்பு.*

*இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றையும், தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைவர்கள் கடந்த காலத்தில் வழங்கிய பல நிறைவேற்றாத வாக்குறுதிகளையும் முன்வைத்து, அரசியல் தீர்விற்காக திரு. சம்பந்தன் மிகச் சிறப்பாக வாதிட்ட எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உள்ளன.*

*அதே மூச்சில், தமிழர்களுக்கான சம உரிமைக்கான கோரிக்கைகள் ஒரு 'ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத' நாட்டுக்குள் அடைய முடியும் என்பதை அவர் ஒருபோதும் குறிப்பிடத் தவறவில்லை.*

*போரின்போது இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்குத் தீர்வு காண்பதில் இலங்கை விருப்பம் காட்டாதபோது, நாட்டில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக 2012 முதல் இலங்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்வதில் முக்கிய தலைமைத்துவம் வழங்கியவர் அவரே.*

*அதேபோன்று, 2018இல் அரசியலமைப்பு நெருக்கடியில் இலங்கை முடங்கியபோது, சம்பந்தன் நாட்டின் நலனை மனதில் வைத்து நிலைமையை மேற்கொள்வதற்கு கொள்கை ரீதியான தலைமைத்துவத்தை வழங்கினார்.*

*இலங்கையிலும் சர்வதேச அரங்குகளிலும் திரு. சம்பந்தன் அவர்கள் பெரிதும் மதிக்கப்படுவதற்கு அவரது இப்படியான உயரிய பண்புகளே காரணம். இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களின் தலைவர்களாலும், பல நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்களாலும், இராஜதந்திரிகளாலும் சம்பந்தன் பெற்ற பெரும் பாராட்டுக்களை உலகத் தமிழர் பேரவை பல சந்தர்ப்பங்களில் பார்த்ததுண்டு.*

*சம்பந்தனின் வாழ்வு காலத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் இலங்கையிலும் சர்வதேச அரங்குகளிலும் அடிக்கடி எதிரொலிக்கப்பட்டு வந்திருக்கிறது.*

*சந்தேகத்துக்கு இடமின்றி இது திரு. சம்பந்தன் மீது அவர்கள் கொண்டிருந்த மரியாதையையும் அபிமானத்தையும் எடுத்துக்காட்டுவதோடு, இலங்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தமிழ் தலைவர்கள் வரிசையில் அவர் இடம்பெற்றிருக்கிறார் என்பதையும் குறிக்கும்.*

*ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால், திரு. சம்பந்தன் இனி நம்மிடையே இல்லை, இலங்கையும் காலங்காலமான தேசியப் பிரச்சினையை அனைத்து சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் இன்னமும் தீர்க்கவில்லை. பல தசாப்தங்களாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் நீதி, சமத்துவம், அங்கீகாரம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் முகமாக இருந்து வந்தவர் சம்பந்தன் அந்த பேராளுமையின் இடத்தை புதிய, தகைமையுள்ள தலைவர் ஒருவரால் ஈடுசெய்வதென்பது மிகப்பெரிய சவால் நிறைந்ததொன்று.*

*புதிய தலைவர் சம்பந்தனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தமிழர் நலன்களுக்காக இடைவிடாமல் குரல் கொடுப்பதுடன், ஒட்டுமொத்த நாட்டின் நலனுடன் பயணிப்பவர்களை ஒருங்கிணைத்து செயற்படுவார் என்று உலகத் தமிழர் பேரவை நம்புகிறது.*

*மறுபுறம், இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களும், குறிப்பாக பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வளவு நீண்ட காலமாக தேசிய பிரச்சினைக்கு நியாயமானதும் நிலையானதுமான தீர்வு காணத் தவறியதன் காரணத்தை ஆழமாகச் சிந்தித்து அறிதல் வேண்டும்.*

*'தேசிய பிரச்சினை' என்று மறைந்த சம்பந்தன் அடிக்கடி குறிப்பிட்ட விடயத்துக்கு, நல்லெண்ணத்துடனும் நேர்மையுடனும், நீதியான மற்றும் நியாயமான தீர்வினை நோக்கிச் செயற்படுவதே நாடு அவருக்கு செலுத்தக்கூடிய அதி உயர்ந்த அஞ்சலியாகும். அதற்கான நேரமும் இதுவே என்றுள்ளது. (05)*

# முல்லைத்தீவு, ஐயங்கன் குளம் பகுதியில் ஆணின் சடலம்!

முல்லைத்தீவு ஐயங்கன் குளம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட காட்டுப் பகுதியை அண்மித்துள்ள பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக ஐயங்கன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 17 நாள்கள் மூடப்படும் மதுபானசாலைகள்

கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவ விழா நேற்று (சனிக்கிழமை) கொடியேற்றத்துடன் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கதிர்காம கந்தன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு கதிர்காம பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் நேற்று 06 ஆம் திகதி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை 17 நாள்களுக்கு முடக்கப்படும் என கலால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ரணிலின் பேச்சை எதிர்ப்பவர்கள்கூட சம்பந்தன் பேச்சை செவிமடுப்பார்கள்

## முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் இரங்கல் உரை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசும்போது ஆக்ரோஷமாக எதிர்ப்பவர்கள்கூட சம்பந்தன் ஐயாவின் பேச்சுக்களை அமைதியாக செவிமடுத்தார்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு கிளையால் கடந்த வியாழக்கிழமை இரவு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கண்ணீர் அஞ்சலி நிகழ்வு அனுட்டிக்கப்பட்டது.

தமிழ் அரசு கட்சியின் காரைதீவு கிளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சம்பந்தன் ஐயா, தந்தை செல்வநாயகத்தின் பாசறையில் வளர்ந்து 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முதன்முதல் அலங்கரித்தார். அன்று முதல் இன்று வரை கொள்கையிலும் இலட்சியத்திலும் மாறாத தலைவராக விளங்கினார்.

தமிழ் மக்களுக்காக முழு வாழ்வையும் அர்ப்பணித்தார். தமிழ் மக்களுக்கான தீர்வை அவருடைய காலத்திலேயே அடைய வேண்டும் என்பதற்காக பற்றுறுதியுடன் செயற்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருங்கிணைப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சம்பந்தன் ஐயா நியமிக்கப்பட்டார்.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் அஹிம்சை வழியில் தமிழர்களின் போராட்டத்தை முன்னெடுத்தார்.

உள்நாட்டு மற்றும் உலக தலைவர்கள் அடங்கலாக அனைத்து தரப்பினர்களுடனும் இராஜதந்திர பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தர இறுதி மூச்சு வரை பகீரத பிரயத்தனங்கள் மேற்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நன்மதிப்பு மிக்க பெருந்தலைவராகவும் விளங்கினார். பக்குவமாகவும் ஆணித்தரமாகவும் உரையாற்றுவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகின்றபோது ஆக்ரோஷமாக எதிர்ப்பவர்கள் உள்ளனர். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றுகின்றபோது அவதூறாக ஏசுபவர்கள் உள்ளனர். ஆனால், இனவாதிகள் அடங்கலாக அனைத்து தரப்பினரும் சம்பந்தன் ஐயாவின் உரைகளை நிதானமாகவும் அமைதியாகவும் செவிமடுப்பது வழக்கம். - என்றார். (05)

# 15 வயது மாணவனை நிர்வாணமாக்கி தாக்கி கைப்பேசியைப் பறித்துச் சென்ற மூவர் கைது

15 வயது மாணவன் ஒருவரை நிர்வாணமாக்கி, தாக்கிவிட்டு, அவரது கையடக்கத் தொலைபேசியை பறித்துச் சென்ற சம்பவம் தொடர்பில் பிறிதொரு மாணவன் உட்பட மூவர் கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை, மாதம்பே மற்றும் வெல்லபட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 16 வயது மாணவனொருவனும் 26 மற்றும் 34 வயதுடைய இரண்டு நபர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவர் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய பின்னர், குளிர்பானம் வாங்குவதற்காக தனது வீட்டுக்கு அருகில் உள்ள கடையொன்றுக்கு சென்றுள்ளார்.

இதன்போது, பிறிதொரு மாணவனும், இரு நபர்களும் கடைக்குச் சென்ற மாணவனை அருகிலிருந்த வீடொன்றுக்குள் கடத்திச் சென்று நிர்வாணமாக்கி, தாக்கிவிட்டு, அந்த மாணவனிடமிருந்த கையடக்கத் தொலைபேசியை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, தாக்குதலுக்குள்ளான மாணவனின் தந்தை இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். அதன் அடிப்படையிலேயே விசாரணைகளின்போது சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அம்பலாங்கொடை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# தென் மாகாண பாடசாலை மாணவர்களுக்கு 300 மில்லியன் செலவில் ஸ்மார்ட் வகுப்பறை

தென் மாகாண பாடசாலை மாணவர்களுக்கு 200 ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் 2,000 டெப் கணினிகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் காலி ஹோல் டி கோல் மண்டபத்தில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

இத்திட்டத்திற்கு இந்திய உதவியுடன் 300 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரணவின் வேண்டுகோளுக்கு இணங்க இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (05)

# மூன்று மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது கினிகத்தேனையில்

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை, மில்லகஹமுல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த மூன்று மாடி கட்டிடம் ஒன்று நேற்று (சனிக்கிழமை) அதிகாலை இடிந்து வீழ்ந்துள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கினிகத்தேனை பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்த கட்டடம் 200 அடி பள்ளத்திற்கு இடிந்து விழுந்துள்ளது.

இந்தக் கட்டடம் இடிந்து விழும் போது அங்கு எவரும் இல்லை எனவும், தரமற்ற முறையில் கட்டிடம் கட்டப்பட்டதால் இவ்வாறு இடிந்து விழுந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# குருணாகலில் திடீர் சுகவீனம் காரணமாக 9 மாணவிகள் வைத்தியசாலையில் சேர்ப்பு

குருணாகல் பிரதேசத்தில் பொல்பித்திகம கல்வி வலயத்துக்குட்பட்ட தொரவேருவ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 9 மாணவிகள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவிகளே இவ்வாறு சுகவீனமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை முடிவடையும் நேரத்தில் மாணவிகள் சிலருக்கு தோல் அரிப்பு மற்றும் உடலில் தழும்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் திடீரென சுகயீனமடைந்துள்ளனர்.

இதனை அவதானித்த அதிபரும் ஆசிரியர்களும் சுகவீனமடைந்த மாணிவிகளை பொல்பித்திகம ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மாணவிகளின் நிலைமை கவலைக்கிடைமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

# தொடர் சம்பியன் பட்டம் வென்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் வி.க.





கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட முன்னணி விளையாட்டுக்கழகங்களில் ஒன்றான சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்கள் கிழக்கு மாகாண முன்னணி விளையாட்டுக்கழகங்களை வீழ்த்தி தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை பெற்றமையை பாராட்டி வீரர்களுக்கு கௌரவமளிக்கும் நிகழ்வு கழக முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவரும், தேசிய நீர்வழுங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தருமான எம்.பி.எம். பாஜிலின் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது. கழக தவிசாளரும், ஓய்வுபெற்ற பிரதியதிபருமான ஏ.எம். நிஸாரின் ஆரம்ப உரையுடனும், கழக ஊடக செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் /ஹதா உமரின் அறிமுக உரையுடனும் ஆரம்பமான இந்த பாராட்டு விழாவில் கல்முனை அபிவிருத்தி குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை பாராட்டி கௌரவித்ததுடன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், அம்பாறை மாவட்ட கிரிக்கட் வீரர்களை தேசிய அணியில் இடம்பிடிக்கச்செய்ய தேவையான வேலைத்திட்டங்களை தான் இனிவரும் காலங்களில் முன்னெடுக்க தயாராக உள்ளதாகவும் கடந்த காலங்களில் நாட்டின் நிலை மோசமானதாக இருந்தாலும் கொரோனா தொற்றின் காரணமாக நாடு சிக்கலில் இருந்ததால் இது தொடர்பில் சிந்திக்க நேரம் இருந்திருக்கவில்லை. - என்றார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஸைபுதீன், பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ் உட்பட பிரதேச கல்விமான்கள், தொழிலதிபர்கள், பிராந்திய முக்கியஸ்தர்கள், கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

# வவுனியா சமுதாய பொலிஸ் குழு அனுராதபுரம், மிகிந்தலையில்



வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பிரிவுக்குப்பட்ட சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்கள் அனுராதபுரம் மற்றும் மிகிந்தலை ஆகிய பகுதிகளுக்கு நட்புறவு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் பிரஜா பொலிஸ் பொறுப்பதிகாரி பிறேமரட்ண தலைமையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட 17 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்கள் இதன்போது சென்றிருந்தனர்.

இவ்வாறு அழைத்து செல்லப்பட்டவர்கள் மிகிந்தலை ராஜமகாவிகாரைக்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன், பௌத்த பிக்குளின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டனர். அதன் பின் அனுராதபுரம் கதிரேசன் ஆலயம், அனுராதபுரம் புனித பூமி, லங்காராமய விகாரை, சிறி மகாபோதி, திரப்பனை ஆகிய பகுதிகளுக்கு சென்றிருந்ததுடன் சகோதர சிங்கள மொழி மக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

திரப்பனையில் வவுனியாவில் இருந்து சென்ற சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்களுக்கும், அனுராதபுரம் சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. குறித்த செயற்திட்டமானது, சமுதாய பொலிஸ் ஊடாக நட்புறவை ஏற்படுத்தி, இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் முகமாக குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது. (05- 100)

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 3 தொன் பீடி இலைகள் மாட்டின

## தமிழ்நாட்டில் சம்பவம்

*தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 3 தொன் பீடி இலைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.*

*தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள ஆலந்தலை கடற்கரை பகுதியில் வெள்ளிக்கிழமை கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.*

*அப்போது, கடற்கரையில் சந்தேகப்படும்படியாக நின்ற லொறியை பொலிஸார் சோதனையிட்டனர்.*

*அந்த லொரியில் 87 வெள்ளை நிற சாக்கு மூடைகளில் தலா 35 கிலோ எடை கொண்ட சுமார் 3 தொன் பீடி இலைகள் இருந்தன.*

*பொலிஸார் நடத்திய விசாரணையில், பீடி இலை பொதிகள் படகு மூலம் இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமை தெரியவந்தது. இதை அடுத்து, பீடி இலை பண்டல்கள் மற்றும் லொறியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.*

*தொடர்ந்து, பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளை சுங்கத்துறையினரிடம் பொலிஸார் ஒப்படைத்ததை தொடர்ந்து, சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2024இல் வெளியிடப்பெற்றது